கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள், வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.4/2026
இன்
அசல் வழக்கு எண்.3/2023
* * * *

காத்தம்மாள் ... மனுதாரர்/வாதி

/ எதிரிடை /

1) முத்துமாரியம்மாள்
2) பிளாவடியான் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனுவானது இன்று 12.03.2026 இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமச்சிவாயம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.விஜய் ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது மனுதாரர்/வாதியால் தாவாச்சொத்தினை தகுதிவாய்ந்த சர்வேயர் உதவியுடன் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து அளவீடு செய்யவேண்டி கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்.</u>**

1.1) மனுதாரர்/வாதி தரப்பு மனுவில், கடந்த 13.09.2004ம் தேதியிட்ட மனுதாரர்/வாதியின் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தில் உள்ள A இலக்கச்சொத்தினை 31.03.1986ம் தேதியிட்ட 1வது எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் தாவாச்சொத்தில் உள்ள ஏற்கனவே உள்ள இயற்கை அமைப்பினை தகுதி வாய்ந்த சர்வேயர் உதவியுடன் அளந்து இயற்கை அமைப்பு, நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்துடன் அறிக்கை சமர்ப்பிக்க உத்திரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், மனுதாரர்/வாதியின் இந்நிர் இடைநிலை மனுவிற்கு எதிராக எதிருரை தாக்கல் இல்லையென்று மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**3) தீர்வு:–**

இருதரப்பு வாதத்திற்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. இருதரப்பிலும் அவர்களது மனுவினை நிரூபிக்கும் பொருட்டு வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

3.1) வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. தாவா மனுதாரர்/வாதியின் மனுவினை அனுமதிப்பது கூறித்து பரிசீலிக்கையில், தாவா அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக தாவாச்சொத்தில் உள்ள B' இலக்கச்சொத்தினை பொதுப்பாதை என்று விளம்புகை செய்யக்கோரியும் அதனை தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், தாவா அசல் வழக்கானது எழுவினா வனைவதற்காக நிலுவையில் உள்ள நிலையில், தாவா B

இலக்கச்சொத்தில் இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை கண்டறிவதற்காக மனுதாரர்/வாதியால் இந்நிர் இடைநிலை மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வழக்குச்சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்வதால் வழக்கு தரப்பினர்களுக்கு இடையேயான பிரச்சனைக்கு தீர்வு காணும் விதமாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2) இந்நிலையில், மனுதாரர்/வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தினை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யவேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிப்பதால், மேற்படி அசல் வழக்கு விசாரணைக்கு அது உரிய நடவடிக்கையாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதினால் அசல் வழக்கில் ஒரு சரியான தீர்வை காண அது வழிவகை செய்ய உதவும் என்பதை கருத்தில் கொண்டும், வழக்குச்சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. மேற்படி வழக்கு சொத்தினை அளவீடு செய்ய கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.I.லட்சுமி என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். மேற்படி நீதிமன்ற ஆணையரின் கட்டணமாக ரூ.8,000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையருக்கான கட்டணத்தை இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் நீதிமன்ற ஆணையர் வசம் நேரடியாக வழங்க வேண்டும் என்றும், மேற்படி, நீதிமன்ற ஆணையர் வழக்குச்சொத்தினை சம்பந்தப்பட்ட சர்வேயரின் மூலம் கிராம நிர்வாக அதிகாரியின் துணைக்கொண்டு சட்ட விதிகளுக்கு உட்பட்டு இருதரப்பில் வழங்கும் ஆவணங்களின் அடிப்படையிலும் அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தினை தாக்கல் செய்ய திரும்ப அழைக்க நாள்: 24.03.2026.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு,

என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.12 18:38:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**இணைப்பு:-**

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்** : இல்லை
2. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.12 18:38:49 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.4/2026
இன்
அசல் வழக்கு எண்.3/2023
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்:12.03.2026